ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2446/36 - 2025 ජූලි මස 22 වැනි අඟහරුවාදා - 2025.07.22

2446/36 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும், கந்தவல தோட்டம் இல. 02, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானையில் அமைந்துள்ளதுமான இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதும் அதன் சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதுமான பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்ற “இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின்” கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனைப் பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம் ஆனது, குறைந்தபட்சம் 90 திறமை மதிப்பீடுகளுடன் புடைவை மற்றும் ஆடை கற்கைகளில் விஞ்ஞான இளமாணி தொடர்பில் (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 5) இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்;

   (அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. உயர்தரத்தில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அத்துடன்

(ஆ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (சாதாரணதரத்தில்) இரண்டு அமர்வுகளை விஞ்சாததாக கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. இந்நிறுவனமானது இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை கந்தவல தோட்டம் இல. 02, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானையில் மாத்திரமே நடாத்துதல் வேண்டும்.

3. இந்நிறுவனமானது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து(5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| புடைவை மற்றும் ஆடை கற்கைகளில் விஞ்ஞான இளமாணி | பீஎஸ்சீ (புடைவை மற்றும் ஆடை கற்கைகள்) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய**,
கல்வி, விஞ்ஞானம் மற்றும்
தொழினுட்பவியல் அமைச்சர்.

கொழும்பு,
2025, யூலை 18.

EOG 07 - 0282

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.